ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2019 சனவரி 16

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்(கொ.மு.சு) – 2018 திசெம்பர்

**தயாரிப்பு நடவடிக்கைகள் நவெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் திசெம்பர் மாதத்தில் ஒரு மெதுவான வீதத்தில் அதிகரித்ததுடன்,** இதற்கு விசேடமாக புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் சார்ந்த நடவடிக்கைகளின் தொழில்நிலை மற்றும் உற்பத்தியில் ஏற்பட்ட மெதுவடைதலினால் பிரதானமாக உந்தப்பட்டது. சில தொழிலாளர்கள் சிறப்பான ஊதியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பருவகால தொழில்களை நோக்கிச் சென்றிருந்த காரணத்தினால் தொழில்நிலையில் ஒரு குறிப்பிடத்தக்களவு சரிவு உணரப்பட்டது. இது குறைவடைந்திருந்த உற்பத்தியினை பகுதியளவில் பாதித்திருந்தது. எவ்வாறாயினும், உணவு மற்றும் குடிபான உற்பத்திகளின் நடவடிக்கையில் தொடர்ச்சியான பண்டிகைப் பருவகாலக் கேள்வியின் பிரதானமான உந்தலினால் புதிய கட்டளைகள் அதிகரித்திருந்தது.

| மாறி | நவம்பர் | திசெம்பர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.3** | **53.7** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 54.0 | 57.0 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 54.0 | 51.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.0 | 46.5 | - | உயர்விலிருந்து வீழ்ச்சி |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.5 | 60.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 52.5 | 55.5 | + | நீட்சி, உயர்வான வீதத்தில் |

இவ்வேளையில் வரவிருக்கின்ற சீனப் புத்தாண்டு பண்டிகை காரணமாக வழங்கல் இடையூறுகளினைக் கருத்திற்கொண்டு எதிர்காலத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் நோக்கத்திற்காக இருப்புக்களைச் சேகரித்தமையினால் கொள்வனவுகளின் இருப்பு ஒரு அதிகரிப்பைக் காண்பித்தது. இந்த வரிசையில் நிரம்பலர் வழங்கல் நேரமும் நீட்சியடைந்திருந்தது.

தொழில்நிலை தவிர்ந்த தயாரிப்பு கொ.மு.சுட்டெண்ணின் அனைத்து துணைச் சுட்டெண்களும் நடுநிலையான 50.0 இற்கு மேலான பெறுமதியினைக் காண்பித்ததுடன் நவெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் திசெம்பரில் ஒரு மெதுவான வீதத்தில் ஒரு ஒட்டுமொத்த விரிவாக்கத்தினைக் காண்பித்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**53.7**
நவெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் 0.6 சுட்டெண் புள்ளிகள் குறைவு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பு**




***உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலக தயாரிப்பு கொ.மு.சு நவம்பரிலிருந்து 0.5 சுட்டெண் புள்ளிகள் குறைவடைந்து திசெம்பரில் 51.5 பெறுமதியினை பதிவு செய்தது.

ஐரோப்பிய வலயம், ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் ரஷ்யா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு திசெம்பர் 2018இல் மெதுவடைந்திருந்துடன் ஐக்கிய இராச்சியம் அதிகரித்திருந்தது.

*(மூலம்: மார்க்கிட்[1], சனவரி 14, 2019 இல் உள்ளபடியான)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குனராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் ஐரோப்பிய வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறையானது, திசெம்பர் 2018இல் அதிகரித்த வீதத்தில் வளர்ச்சியடைந்ததுடன்** இதற்கு வியாபார நடவடிக்கைகள், நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் மற்றும் புதிய வியாபாரங்கள் போன்றவற்றிலான உறுதியான மீட்சி பேருதவியாக அமைந்தது.

பண்டிகைப் பருவகாலம் மற்றும் சுற்றுலாத் துறையின் உச்ச பருவகாலம் என்பவற்றின் காரணத்தினால் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துணைத் துறைகளில் ஒரு உறுதியான வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டு வியாபார நடவடிக்கைகள் துணைச் சுட்டெண் திசெம்பரில் ஒரு பத்து மாத உயர்வினை அடைந்தது. ஓய்வுநேர நடவடிக்கைகள் போன்ற ஏனைய தனியாள் பணிகள் விடுமுறை பருவகாலத்துடன் அதிகரித்திருந்த வேளையில் கப்பல் போக்குவரத்தின் அதிகரித்த அளவுடன் பொருட்கள் போக்குவரத்து ஒரு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. சாதகமான கேள்வி நிலைமைகள் காரணமாக நிதியியல் பணிகள், காப்புறுதி மற்றும் நிபுணத்துவப் பணிகள் போன்றவற்றின் புதிய நடவடிக்கைகளில் வளர்ச்சி அவதானிக்கப்பட்டது.

| மாறி | நவம்பர் | திசெம்பர் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **52.6** | **54.7** | **+** | **அதிகரிப்பு, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய வியாபாரங்கள் | 53.4 | 55.4 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில |
| வியாபார நடவடிக்கைகள் | 57.4 | 64.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.3 | 44.1 | - | வீழ்ச்சி |
| நிலுவையிலுள்ள பணிகள் | 44.6 | 47.2 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 55.1 | 62.4 | + | சாதகம், உயர்வான வீதத்தில் |

வெற்றிடமாக்கப்பட்ட நிலைகளுக்கு ஆட்சேர்ப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக திசெம்பர் மாதத்தில் வியாபார நடவடிக்கைகள் ஒரு உறுதியான வீதத்தில் வளர்ச்சியடைந்திருந்த போதிலும் அநேக துறைகளில் வேலை உருவாக்கம் மெதுவடைந்திருந்தது.

பணிகள் துறையில் விதிக்கப்பட்ட விலைகள் நலிவடைந்த உள்நாட்டு நாணயம் மற்றும் அண்மைய வட்டிவீத அதிகரிப்புக்கள் காரணமாக அதிகரித்திருந்த வேளையில் பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவு ஒரு மெதுவடைந்த வீதத்தில் திசெம்பரில் அதிகரித்திருந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**

**54.7**

**நவெம்பர் 2018 உடன் ஒப்பிடுகையில் 2.1 சுட்டெண் புள்ளிகள் உயர்வு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் பணிகள்**




***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலக பணிகள் கொ.மு.சு நவம்பரின் நான்கு மாத உயர்வான 53.7 இலிருந்து திசம்பரில் 53.1 இற்கு குறைவடைந்ததுடன் தற்போது 113 தொடர்ச்சியான மாதங்களுக்கான வளர்ச்சியினையும் சமிஞ்சை செய்தது.

ஜப்பான், சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு நவம்பருடன் ஒப்பிடுகையில் திசம்பரில் அவர்களுடைய பணிகள் துறையானது மேம்பாடு அடைந்தமையினை சுட்டிக்காட்டுகின்றன.

*(மூலம்: மார்க்கிட், சனவரி 14, 2019 இல் உள்ளபடியான)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு $=50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு $>50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு $<50$ மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.